<u>முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>
<u>முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,</u>
<u>முதன்மை சார்பு நீதிபதி.</u>

ம.சா. 1 – செழியன்
தேதி.03.01.2025
MCOP. No.63/2024

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு 3ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் இந்த விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்ததாக சொல்லப்படும் இருசக்கர வாகனத்தில் மூன்று பேர் பயணம் செய்தார்கள் என்றால் சரிதான். மேற்படி வாகனத்தை அஜய் ஓட்டினார் என்றால் சரிதான். எனது மகன் தேவமணி மற்றும் வேல்முருகன் ஆகிய இருவரும் வாகனத்தின் பின்னால் அமர்ந்து பயணம் செய்தார்கள் என்றால் சரிதான், எனது மகன் கடைசியாக அமர்ந்து பயணம் செய்தார் என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தின் இரண்டு நபர்கள் மட்டுமே பயணம் செய்ய வேண்டும் என்றாலும், அதில் மூன்று நபர்கள் பயணம் செய்தால் தவறு என்றாலும் சரிதான். வாகனத்தை ஒட்டி சென்ற அஜய் என்பவருக்கு ஒட்டுநர் உரிமம் கிடையாது என்றால் சரிதான். எனது மகன் எலக்ரிஷன் வேலை செய்வதற்கான பட்டைய படிப்போ, பட்ட படிப்போ படிக்கவில்லை என்றால் சரிதான். என் மகன் 10 வகுப்பு தேர்ச்சி பெறவில்லை. அவர் எலக்ரிஷனாக வேலை செய்ததற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மாதம் 18 ஆயிரம் வருமானம் ஈட்டி வந்தார் என்பதற்கு ஆவணமோ, ஆதாரமோ இல்லை என்றால் சரிதான். தமிழ்நாடு அரசால் வழங்கப்படும் மரபுசாரா தொழிளாருக்கான அடையாள அட்டை எதுவும் கிடையாது என்றால் சரிதான். இந்த விபத்து வாகனத்தை ஓட்டி சென்ற அஜய் என்பவருக்கு ஒட்டுநர் உரிமம் இல்லாததால் 3ஆம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. எனது மகனின் வயதை காண்பிக்க கூடிய ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது மகன் விதிமுறைகளை மீற இருசக்கர வாகனத்தில் மூன்றாவது நபராக பயணம் செய்ததால் காப்பீடு நிறுவனம் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர்கள் அல்ல என்றால் சரியல்ல. உரிமம் இல்லாமல் வாகனத்தை ஓட்டுவது என்பது காப்பீடு விதிமீறல் என்பதால் 3ஆம் எதிர்மனுதாரரை பொறுத்து தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. மோட்டார் வாகன சட்ட திருத்தம் 2022 ன் படி 01.04.2022 பிறகு நடைபெறும் விபத்துகளில் ஓட்டுநருக்கு உரிமம் இல்லை என்றால்

வாகன உரிமையாளரே முழு பொறுப்பு என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 3ஆம் எதிர்மனுதாரரை பொறுத்து இவ்வழக்கு தள்ளுபடிக்கு உரியது என்றால் சரியல்ல.